# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Province

### இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I<br>Communication and Media Studies I | நேரம் :<br>1மணித்தியாலம் |
| சுட்டெண்:............................... | 87 T I | |

**கவனிக்க:**
- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

1. இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை
   1. இந்து சாசனம்  2. பாதுகாவலன்  3. உதயதாரகை  4. கொழும்பு ஜேர்னல்
2. சீன நாட்டவர்களினால் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சிடல் நுட்பத்தை நவீன முறையிலான அச்சிடல் நுட்பமாக மாற்றியவர்
   1. குட்டன்பேர்க்  2. கிரகம்பெல்  3. சாயி லுன்  4. மார்க்கோணி
3. பின்வருவனவற்றுள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் எழுதப்படும் மொழிகள்
   1. தமிழ்மொழி – அரபுமொழி  2. அரபுமொழி – சீனமொழி
   3. தமிழ்மொழி – சீனமொழி  4. சீனமொழி – ஜப்பானிய மொழி
4. நாட்டில் அண்மையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவங்களையடுத்து பாடசாலையில் பொருத்தப்பட்டு வரும் தொழில்நுட்ப கண்காணிப்பு நடவடிக்கை
   1. நிலைான தொலைபேசி  2. வீடியோ கமெரா
   3. இராணுவச் சோதனைச் சாவடி  4. குறுந்தூர தொலைக்காட்சிச் சுற்று
5. கேட்பவர் ஒருவரிடமிருந்து அவரால் தெரிவு செய்யப்பட்ட பலருக்கு செய்தி பரவுகின்ற செயல்முறை யுடன் தொடர்புடைய சங்கிலி மாதிரி
   1. தனிச் சங்கிலி மாதிரி  2. நிகழ்தகவுச் சங்கிலி மாதிரி
   3. புறணி பேசுதல் சங்கிலி மாதிரி  4. கொத்தணிச் சங்கிலி மாதிரி
6. தொடர்பாடல் வடிவத்தையும் தொடர்பாடல் வகையினையும் கொண்ட தொகுதி
   1. ஆளுள் தொடர்பாடல் - முறைசார் தொடர்பாடல்
   2. ஆளிடைத் தொடர்பாடல் - வாய்மொழியற்ற தொடர்பாடல்
   3. குழுத்தொடர்பாடல் - எழுத்து மூலத் தொடர்பாடல்
   4. கட்புலத் தொடர்பாடல் - வெகுசனத் தொடர்பாடல்
7. ஆட்களிடைத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தக்கூடிய கருவிகளுடன் பொருந்தாதது
   1. கடிதங்கள்  2. தொலைநகல்  3. தொலைக்காட்சி  4. தொலைபேசி

8. புத்தகம் ஒன்றைத் தயாரிக்கும் பணியில் இறுதிக்கட்டத்தை அடைந்த விமல் அதனைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தக்கூடிய கருவிகள்

1. புத்தகம் ஒழுங்கமைப்புச் சாதனம் 2. ஸ்டெப்ளர்
3. வெட்டும் இயந்திரம் 4. மேற்கூறிய யாவும்

9. செய்திப் பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்திகளில் எழுத்துப் பிழைகள் காணப்பட்டன. இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய பணியாளர்

1. செய்தியாளர் 2. பக்கவடிவமைப்பாளர்
3. ஒப்புநோக்குனர் 4. உதவி ஆசிரியர்

10. பின்வருவனவற்றுள் நவீன ரீதியான செவிப்புல ஊடகங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைவது

1. வானொலி 2. விலங்குகளின் ஓசை 3. அதான் ஒலி 4. காண்டாமணி ஓசை

11. உயர்தரத்தில் ஊடகக்கற்கை பாடத்தைக் கற்பதால் இலகுவாகப் பல்கலைக்கழகம் செல்லலாம் என ராஜா சிந்தித்தான். இங்கு இடம்பெற்ற தொடர்பாடல் வகை

1. வாய்மொழியற்ற தொடர்பாடல் 2. அகத்தொடர்பாடல்
3. எழுத்துமூலத் தொடர்பாடல் 4. முறைசார் தொடர்பாடல்

12. உலகின் முதலாவது கடதாசியை உருவாக்கிய பெருமையைத் தனதாக்கிக் கொண்டவர்

1. லாஸ்வெல் 2. குட்டன்பேர்க் 3. சாயி லுன் 4. கிரகம்பெல்

13. மானுட சமூகத்தின் ஆரம்பத் தொடர்பாடலுக்கான மூலப்பொருட்களுக்குள் உள்ளடக்காதது

1. இலைகள், கிளைகள் 2. மரத்துண்டுகள், பட்டைகள்
3. எலும்புத் துண்டங்கள் 4. துணிகள், கடதாசி

14. கலங்கரை விளக்கு முறை அல்லது வெளிச்சவீட:டு நுட்பமுறை பின்பற்றப்படும் தொடர்பாடல்

1. ஆளிடைத் தொடர்பாடல் 2. வெகுசனத் தொடர்பாடல்
3. முறைசாராத் தொடர்பாடல் 4. குழுத் தொடர்பாடல்

15. ஹரோல்ட் டீ லாஸ்வெலின் மாதிரியில் குறிப்பிடப்பட்ட அடிப்படைகள் முறையே

1. தொடர்பாடுநர் - ஊடகம் - செய்தி – பெறுநர் - தாக்கம்
2. தொடர்பாடுநர் - தாக்கம் - செய்தி – ஊடகம் - பெறுநர்
3. தொடர்பாடுநர் - செய்தி – ஊடகம் - பெறுநர் - தாக்கம்
4. தொடர்பாடுநர் - பெறுநர் - செய்தி – ஊடகம் - தாக்கம்

16. பக்க வடிவமைப்பிற்காக மிகச் சிறப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மென்பொருளுடன் பொருந்தாதது

1. அடோப் பேஸ்மேக்கர் 2. டொட் மட்ரிக்ஸ் 3. கோரல் ட்ரோ 4. அடோப் இன் டிசைன்

17. செய்திப் பத்திரிகையின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு தொடர்பான முழுப் பொறுப்பினையுமத் நிர்வகிப்பவர்

1. பிரதம ஆசிரியர் 2. செய்தியாளர் 3. விளம்பரதாரர் 4. பணிப்பாளர் சபை

18. நிறைவேற்றதிகாரம் கொண்ட ஒரு உத்தியோகத்தரின் கையொப்பத்திற்கு அதிகாரம் கிடைக்கப் பயன்படுத்தக்கூடிய சாதனம்

1. கணிப்பான் 2. தபால்முத்திரையிடல் இயந்திரம்
3. பதவி முத்திரைக் கருவி 4. திகதி முத்திரைக் கருவி

19. தகவலானது சமிக்ஞை வடிவில் ஊடுகடத்தும் போது ஏதேனும் இரைச்சல் ஏற்பட்டு தொடர்பாடலானது தடைப்படலாமெனக் கூறும் மாதிரி

1. லாஸ்வெல் மாதிரி 2. இருவழித் தொடர்பாடல் மாதிரி
3. நேர்வழி மாதிரி 4. ஷனன் - வீவர் மாதிரி

20. பல்லூர்க எறிவை உபகரணத்தைப் பயன்படுத்தி ஆசிரியர் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட போது இடையில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இங்கு தொடர்ச்சியாகக் கற்பித்தலை முன்னெடுக்கப் பொருத்தமான உபகரணம்

1. ஊடாடுகைப் பலகை 2. வெண்பலகை 3. துரித எறிவை 4. மேந்தலை எறிவை

21. தொலைபேசித் தொடர்பாடலில் ஈடுபட்டுள்ள இருவரால் பகிரப்படும் தகவல்களில் கைக்கொள்ளப்பட வேண்டிய விதிமுறைகளுடன் பொருந்தாத கூற்று

1. சுருக்கமாகக் கூறுதல் 2. தெளிவாகக கூறுதல்
3. உடல்மொழியால் கூறுதல். 4. திட்டமிட்டு கூறுதல்

22. பின்வருவனவற்றுள் எறிவை சாரா ஊடக உபகரணங்'கள் கொண்ட தொகுதியை தெரிவு செய்க

1. கரும்பலகை, ஊடாடுகைப் பலகை, காந்தப் பலகை
2. வெண்பலகை, மேந்தலை எறிவை, பல்லூடக எறிவை
3. காந்தப் பலகை, கரும்பலகை, பல்லூடக எறிவை
4. துரித எறிவை, செருகி, பட எறிவை

23. பொதுசன ஊடகமாகவுள்ள வானொலி உபகரணத்தைக் கண்டுபிடித்த கண்டுபிடிப்பாளர்

1. ஜோஹ்ஹான்னஸ் குட்டன்பேர்க் 2. குக்லியோ மார்க்கோணி
3. மோர்ஸ் 4. கிரகம்பெல்

24. வாய்மொழியற்ற தொடர்பாடலில் இடம்பெறும் உடல்சார் காரணிகளுடன் பொருந்தாத கூற்று

1. உடல் அசைவுகள் 2. முகபாவங்கள்
3. கண்களின் நடத்தைகள் 4. இனிமையான பாடல்கள்

25. - பெருந்திரளான மக்கள் கூட்டத்தினருக்கு இடம்பெறும்
- அடிப்படையில் ஒரு வழியில் நடைபெறும்
- தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்படும்.

மேற்குறித்த பண்பியல்புகளுடன் பொருந்தும் தொடர்பாடல் வகை

1. வெகுசனத் தொடர்பாடல் 2. அகத் தொடர்பாடல்
3. குழுத் தொடர்பாடல் 4. ஆளிடைத் தொடர்பாடல்

26. கடிதங்கள், உள்ளகத் தொலைபேசி முகாமைத்துவ தொகுதி என்பவற்றைப் பயன்படுத்தி நிறுவனம் ஒன்றில் வெவ்வேறு மட்டங்களின் பணிக்குழுவினரிடையே செயற்படுகின்ற தொடர்பாடல் முறைமை

1. எழுத்துமூல தொடர்பாடல் 2. முகாமைத்துவ தொடர்பாடல்
3. மேலிருந்து கீழான தொடர்பாடல் 4. குறுக்குத் தொடர்பாடல்

27. உயர்மட்டத் தூண்டல், பின்னூட்டலை ஏற்படுத்தக்கூடிய தொடர்பாடல் வகை உரித்தாவது

1. ஆளுள் தொடர்பாடல் 2. ஆளிடைத் தொடர்பாடல்
3. குழுத் தொடர்பாடல் 4. வெகுசனத் தொடர்பாடல்

28. இன்றுள்ள காலகட்டத்தில் ஊடகங்கள் அனைத்தும் தனித்து இயங்குவதில் பயனில்லை எனும் தன்மையினைப் பிரதிபலிக்கும் ஊடக வெளிப்பாடு

1. சமூக ஊடகம் 2. வெகுசன ஊடகம் 3. குடிசன ஊடகம் 4. இணைந்த ஊடகம்

29. நாணயக் கணக்கீட்டு இயந்திரம் பற்றிய பிழையான கூற்று

1. வங்கிகள், நிதிநிறுவனங்களில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.
2. நவீன வசதிகளுக்கேற்ப, போல் நாணயத்தாள்களையும் இனங்காணலாம்.
3. இவை நாயணத்தாள்களின் பெறுமதியை அன்றி நாயணத்தாள்களின் எண்ணிக்கையையே கணக்கிடுகின்றன.
4. நேர வீண்விரயத்தைக் குறைத்தாலும் நம்பகத் தன்மை குறைவு.

30. ரவி காலையில் எழுந்தபோது தனக்கு மிகவும் பிடித்த தொடர்கதையைப் பத்திரிகையில் வாசிக்க எண்ணினான். பின்னர் தனது நண்பனுடன் தொலைபேசியில் உரையாடிய அவன் மாலை வேளையில் தனக்குப் பிடித்த தொலைக்காட்சியில் மெய்மை நிகழ்ச்சியொன்றைப் பார்வையிட்டு மகிழ்ந்தான். இங்கு தொடர்புபடும் தொடர்பாடல் வகைகள் முறையே,

1. ஆளிடைத் தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடல், ஆளுள் தொடர்பாடல்
2. வெகுசனத் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடல்
3. ஆளுள் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல், வெகுசன தொடர்பாடல்
4. ஆளுள் தொடர்பாடல், குழுத் தொடர்பாடல், கட்புலத் தொடர்பாடல்

31. அன்றாட வாழ்வில் மனிதனின் தொடர்பாடல் கொள்திறனில் கூடியதும், ஆபத்தான் அனர்த்த நிலைமை களை அறிவிக்கப் பொருத்தமானதுமான தொடர்பாடல் வடிவம்

1. வாய்மொழித்தொடர்பாடல்
2. முறைசாரா தொடர்பாடல்
3. செவிப்புலத் தொடர்பாடல்
4. கட்புலத் தொடர்பாடல்

32. ஏதாவது தகவல் ஒன்றை ஒவ்வொரு தனிநபருக்கும் தனித்தனியாக நேரடியக விநியோகிக்கப் பொருத்தமான அச்சு ஊடக வகைப்பாடு யாது?

1. புத்தகங்கள்
2. சஞ்சிகைகள்
3. துண்டுப் பிரசுரங்கள்
4. சுவரொட்டிகள்

33. வெகுசனத் தொடர்பாடல் பற்றி மாணவர்கள் சிலர் முன்வைத்த கருத்துக்கள் வருமாறு:

அமல் : அவை பிரதானமாக வணிக நோக்கத்தை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றன.
விமல் : தொழில்சார் தொடர்பாடுநர்களால் இங்கு தகவல் வழங்கப்படுகின்றது.
நிமல் : தொழில்நுட்ப பயன்பாடு அத்தியாவசியமாகும்.

மேற்குறித்த கூற்றுக்களுள் சரியான கூற்றினை முன்வைத்தவர் / முன்வைத்தோர்

1. அமல் மட்டும்
2. விமல், கமல் ஆகியோர் மட்டும்
3. அமல், நிமல் மற்றும் அமல் ஆகியோர்
4. கமல், நிமல், அமல் ஆகியோர்

34. தொடர்பாடல் செயலொழுங்கில் சமிக்ஞை பரிமாற்றம் தொடர்பாகக் குறிப்பிட்ட மாதிரி

1. ஹரோல்.டிலாஸ்வெல் மாதிரி
2. ஷெனோன் வீவர் மாதிரி
3. வாயிற்காப்போன் மாதிரி
4. ஒஸ்உட் மற்றும் ஷரம் மாதிரி

35. - செய்தி பொதுவானது
- ஒருவழித் தொடர்பு செயன்முறை
- தாமதமான பின்னூட்டல்

மேற்கூறிய கூற்றுக்கள் தொடர்புபடும் தொடர்பாடல் வகை

1. ஆளுள் தொடர்பாடல்
2. குழுத் தொடர்பாடல்
3. ஆளிடைத் தொடர்பாடல்
4. வெகுஜனத் தொடர்பாடல்

36. பின்னூட்டம் ஒன்றில் வாய்மொழி மற்றும் வாய்மொழியில்லாத தொடர்பாடல் ஒரே நேரத்திலும் வினைத்திறனுடனும் பயன்படுத்துவது

1. ஆளுள் தொடர்பாடல்
2. நபரிடைத் தொடர்பாடல்
3. குழுத் தொடர்பாடல்
4. முறைசாராத் தொடர்பாடல்

37. வகுப்பறை ஒன்றில் பக்கம் புரட்டியின் (Flipchart) முக்கியத்துவத்தை மாணவர்கள் சிலர் கூறிய கருத:து வருமாறு. இதில் பெற்றுக்கொளள் முடியாதது

1. பக்கம் புரட்டியின் என்பது முன்னாயத்தம் செய்யப்படும் ஒரு விசேட உபகரணமாகும்.
2. பக்கப் புரட்டியை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்.
3. பக்கம் புரட்டிகரு எழுத்துக்களை மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.
4. பக்கம் புரட்டியில் எழுதப்படுகின்ற வாக்கியங்கள் குறுகியதாக அமைய வேண்டும்.

38. வகுப்பறைக் கலந்துரையாடலில் மின்னஞ்சலின் அனுகூலம் தொடர்பாக ஒரு தொகுதி மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| ரவி | : | ஏனைய அஞ்ச் செயன்முறையுடன் ஒப்பிடும் பொழுது செலவு குறைந்தது |
| கருணா | : | மின்னஞ்சல் ஆவணத்துடன் அசையாப்படங்கள் அசையும் படங்கள் ஒலி ஆகிய வற்றை இணைத்து அனுப்ப முடியும். |
| காயா | : | மின்னஞ்சல் ஆவணங்களைக் கிடைக்கின்ற ஒழுங்கில் சேமித்து பாதுகாப்பாக வைக்க முடிதல். |

மேற்கூறிய கூற்றக்களில் தவறன கூற்றை முன்வைப்பவர் / முன்வைப்போர்

1. கருணா
2. ரவி
3. ரவி, காயா
4. மேற்கூறிய எவருமல்ல

39. ஏனைய எறிவை ஊடக உபகரணங்களோடு ஒப்பிடுமிடத்து விலை அதிகமாகவிருப்பினும் முன்னேற்ற கரமான நிலையை எட்டியுள்ள ஊடக உபகரணம் பின்வருவனவற்றுள் எது?

1. துரித எறிவை
2. பல்லூடக எறிவை
3. வழுக்கி எறிவை
4. ஊடடுகை பலகை

40. ஆளுள் தொடர்பாடல் என்பது

1. தொடர்பின் மட்டத்தைக் கட்டுப்படுத்துகின்றது
2. வரையறுத்த குழுவுடன் கொண்டுள்ள கிடைத்தொடரும்
3. வாங்கிகளை ஊக்குவிப்பதும் தூண்டல்களினால் ஏற்படுத்துவதும்
4. ஒரே ஆளிடம் நடைபெறும் வாங்கி வகிபாகப் பரிமாற்றம்.